TNRM100037632024



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் மார்ச் மாதம் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.163/2024**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சிக்கல் காவல் நிலைய குற்ற எண்.84/2024. |
| **எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | நாகராஜன் |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | பாண்டி |
| 4. | வயது | 44/2024 |
| 5. | தொழில் | – |
| 6. | முகவரி | 2/105, வடக்கு தெரு, காமராஜபுரம், கடலாடி தாலுகா, இராமநாதபுரம். |
| 7. | சம்பவ நாள் | 29.06.2024 ம் தேதி 10.30 மணி |
| 8. | புகார் தேதி | 29.06.2024 ம் தேதி 12.30 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | (நிலையப்பிணை) 29.06.2024 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | (நிலையப்பிணை) 29.06.2024 |
| 11. | கமிட்டல் உத்தரவு | இல்லை |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 17.10.2024 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 04.03.2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(i)ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழ் |



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:46 +0530

| | | |
|---|---|---|
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | - |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | <table><tr><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr><tr><td>அ.சா.1</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr><tr><td>அ.சா.3</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr><tr><td>அ.சா.4</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr></table> |
| 17. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 04.03.2026 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவின் படியான மனுக்கள் | M.P.No.04/2026 Petition U/s.320 Cr.P.C. filed and dismissed on 02.03.2026. |
| 20. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.A.ராஜன் |
| 21. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.M.ஜோதிமுருகன் |
| 22. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 23. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 06.03.2026 |
| 24. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 06.03.2026 |
| 25. | தீர்ப்பின் முடிவு | முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழ் |


Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:50 +0530

| | | |
|---|---|---|
| | | குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக 04.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை – 1 திரு.A.ராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ஜோதிமுருகன் அவர்கள் ஆஜராகியும், இந்நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2. கடந்த 29.06.2024 ம் தேதி காலை 10.30 மணியளவில் புகார்தாரரின் வீட்டில் கட்டிட வேலை நடப்பதால் எதிரியின் வீட்டு பக்கம் போகும் EB வயரை எதிரி கயிறால் இழுத்து கட்டி வைத்ததால் ஊருக்குள் அடிக்கடி கரண்ட் போவது சம்மந்தமாக எதிரியானவர் நாடக மேடை அருகில் வரும்போது புகார்தாரர் எதிரியை பார்த்து EB வயரை ஏன் கட்டி வைக்கிறாய் ஊருக்குள்ள கரண்ட் கட் ஆகுது அவுத்து விடுங்க



SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:52 +0530

என்று சொன்னதற்கு எதிரி புகார்தாரரைப் பார்த்து உனக்கென்னடா உன் வேலை மயிரபார்த்துக்கிட்டு போட சுன்னி மவனே என அசிங்கமாக பேசி புகார்தாரரை கீழே பிடித்து தள்ளிவிட்டு அருகில் கிடந்த கம்பினை எடுத்து புகார்தாரரின் தலையில் அடித்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது 17.10.2024ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரி பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் கு.வி.மு.ச. பிரிவு 207ன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின் நகல்கள் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் 12.12.2024ம் தேதியன்று எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு 240(1)ன் கீழ் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் படி எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:55 +0530

அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு 242-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் மொத்தம் 6 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆகவும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி அ.சா.2 ஆகவும், பார்வை மகஜர் சாட்சி அ.சா.3 ஆகவும், புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மற்ற சம்பவ சாட்சிகள், மற்றொரு பார்வை மகஜர் சாட்சி ஆகியோர் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் 6 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்றுப் பொருள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு : அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 2024ம் ஆண்டு அ.சா.1 தனது வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே சில நபர்கள் அவர்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும், அங்கு சென்று அவர்களை விலக்கிவிட முயற்சி செய்தபோது கீழே விழுந்து தனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும், அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் எதிரியால் ஏற்பட்டதல்ல என்றும், இச்சம்பவம் குறித்து சிக்கல் காவல் நிலையத்தில் தெரிவித்தபோது சிக்கல்

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:14:59 +0530

போலீசார் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டதாகவும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் (அ.சா.ஆ.1) தன்னுடையது என்றும், புகார் மனுவில் என்ன எழுதியிருந்து என தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.2 தனது சாட்சியத்தில், வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், போலீசார் விசாரிக்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.3 தனது சாட்சியத்தில், அ.சா.3 னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் (அ.சா.ஆ.2) தன்னுடையது தான் என்றும், சிக்கல் காவல் நிலையத்தில் இருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டன் பேரில் கையொப்பம் செய்ததாகவும், அதிலுள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.4 தனது சாட்சியத்தில், கடந்த 29.06.2024 ம் தேதி மதியம் 12.30 மணியளவில் சிக்கல் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது என்பவர் காமராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்த சௌந்திரபாண்டி மகன் கோபி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு (அ.சா.ஆ.3) பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.84/2024 பிரிவுகள் 294(b), 323, 506(1) இ.த.ச.-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.4) பதிவு செய்ததாகவும், பின்னர் அன்றைய தினமே மதியம் 13.30 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் பூமாரி மற்றும் வீரசேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.சா.ஆ.5 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 தயார் செய்ததாகவும், பின்னர் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 29.06.2024 ம் தேதி அன்றே

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:15:02 +0530

வழக்கின் எதிரிகளை 14.00 மணிக்கு அவர்களது வீட்டில் வைத்து கைதுக்கான காரணம் கூறி உச்சநீதிமன்ற கட்டளையை பின்பற்றி நிலையம் கொண்டு வந்து தக்க இருநபர்கள் ஜாமீனில் நிலையப்பிணையில் விடுவித்ததாகவும், வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, 506(1) இ.த.ச.–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

9. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)ன் கீழ் 04.03.2026 ம் தேதியன்று வினவியபோது, அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

10. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

## தீர்வு

11. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 6 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அ.சா.1 ம், எதிரியும்

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:15:05 +0530

சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், அரசுத் தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதாலும், அரசுத் தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் செய்தார்.

12. இவ்வழக்கில் அ.சா.1 ம், எதிரியும் பெரியோர் முன்னிலையில் சமாதானமாகி விட்டதாக கு.வி.மு.ச. பிரிவு 320(2)-ன் கீழ் மனு தாக்கல் செய்து அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 முதல் அ.சா.4 தவிர இதர சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள்.

13. அ.சா.4 ஆவணங்களின் அடிப்படையில் அளித்த சாட்சியம் மற்றும் அவர் மூலம் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, கடந்த 29.06.2024 ம் தேதி காலை 10.30 மணியளவில் புகார்தாரரின் வீட்டில் கட்டிட வேலை நடப்பதால் எதிரியின் வீட்டு பக்கம் போகும் EB வயரை எதிரி கயிறால் இழுத்து கட்டி வைத்ததால் ஊருக்குள் அடிக்கடி கரண்ட் போவது சம்மந்தமாக எதிரியானவர் நாடக மேடை அருகில் வரும்போது புகார்தாரர் எதிரியை பார்த்து EB வயரை ஏன் கட்டி வைக்கிறாய் ஊருக்குள்ள கரண்ட் கட் ஆகுது அவுத்து விடுங்க என்று சொன்னதற்கு எதிரி புகார்தாரரைப் பார்த்து உனக்கென்னடா உன் வேலை மயிரபார்த்துக்கிட்டு போட சுன்னி மவனே என அசிங்கமாக பேசி புகார்தாரரை கீழே பிடித்து தள்ளிவிட்டு அருகில்

கிடந்த கம்பினை எடுத்து புகார்தாரரின் தலையில் அடித்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்தாரரால் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

14. சம்பவம் குறித்து அ.சா.1 புகார் மனு அளித்த போதிலும் தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு, கடந்த 2024ம் ஆண்டு அ.சா.1 தனது வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே சில நபர்கள் அவர்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும், அங்கு சென்று அவர்களை விலக்கிவிட முயற்சி செய்தபோது கீழே விழுந்து தனக்கு தலையில் காயம் ஏற்பட்டதாகவும், அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் எதிரியால் ஏற்பட்டதல்ல என்றும், இச்சம்பவம் குறித்து சிக்கல் காவல் நிலையத்தில் தெரிவித்தபோது சிக்கல் போலீசார் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுக் கொண்டதாகவும், புகார் மனுவில் என்ன எழுதியிருந்து என தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சாட்சியை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்த போதிலும் அவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்பதால் மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் தன்மை நிலையான நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும் விதமாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு முரண்பட்டு காணப்படுவதால் அ.சா.1 அளித்த புகார் மனு மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது. அ.சா.1 முதல்

அ.சா.4 தவிர மற்ற சம்பவ சாட்சிகள், மற்றொரு பார்வை மகஜர் சாட்சி ஆகியோர் விசாரணை செய்யப்படவில்லை. புலன் விசாரணை அதிகாரி அளித்த சாட்சியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எதிரிகள்தான் இவ்வழக்கின் குற்றத்தை செய்தார்கள் என்று அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவு காண இயலாது. எனவே மேற்படி சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

16. முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு சாதகமாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

17. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

18. எதிரியின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர்,

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:15:21 +0530

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 06ம் தேதி வெள்ளிக்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:15:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| அ.த.சா. | அரசுத்தரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | கோபி (புகார்தாரர்) |
| அ.சா.2 | ராமலெட்சுமி |
| அ.சா.3 | பூமாரி |
| அ.சா.4 | விஜயபாஸ்கரன் (சார்பு ஆய்வாளர்) |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | | |
|---|---|---|
| Ex.P.1 | 29.06.2024 | புகார் மனுவிலுள்ள கையொப்பம் |
| Ex.P.2 | 29.06.2024 | பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் |
| Ex.P.3 | 29.06.2024 | புகார் மனு |
| Ex.P.4 | 29.06.2024 | முதல் தகவல் அறிக்கை |
| Ex.P.5 | 29.06.2024 | பார்வை மகஜர் |
| Ex.P.6 | 29.06.2024 | மாதிரி வரைபடம் |

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை.

எதிரி தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரி தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரி தரப்பு சான்று பொருள் :- இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.06 14:41:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

குறிப்பு:-

1. சாட்சிகளின் விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
2. சாட்சிகள் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து குற்றமுறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.